**OPEN ACCESS**

Manuscript ID: TAM-11012026-11252

Volume: 11

Issue: 1

Month: July

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 26.04.2026

Accepted: 20.06.2026

Published: 01.07.2026

Citation:
Vimalaraj, A. (2026). The Role of Drama in Education in Developing 21st Century Skills: A Theoretical Study Centered on the Sri Lankan School Context. *Shanlax International Journal of Tamil Research, 11*(1), 33–46.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i1.11252

*Corresponding Author:
vimalaraj72@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# The Role of Drama in Education in Developing 21st Century Skills: A Theoretical Study Centered on the Sri Lankan School Context

**Alagiah Vimalaraj**
*Senior Lecturer, Department of Dance and Drama*
*Swami Vipulananda Institute of Aesthetic Studies*
*Eastern University, Sri Lanka*
*https://orcid.org/0009-0004-0244-4040*

**Abstract**

*In the context of modern globalization, this article explores the contribution of Drama in Education (DiE) in fostering 21st-century skills such as critical thinking, creativity, and communication skills among students. As the contemporary exam-centered education system tends to stifle the natural personality development of students, Drama in Education is proposed as an alternative, grounded in the theories of Constructivism and the Pedagogy of the Oppressed.*

*Adopting a qualitative research methodology, this study examines various dramatic techniques through the conceptual frameworks of Brian Way, Augusto Boal, and Paulo Freire. Specifically, it discusses student identity formation and the creation of a 'safe space' for learning through Erik Erikson's theory of psychosocial development. Furthermore, the paper explains in detail how bringing folk ritual performances, such as Madurai Veeran, into the classroom can raise awareness among students regarding social hierarchies and social justice.*

*The findings of the study confirm that educational drama techniques—such as role-play, freeze-frames, and teacher-in-role—not only enhance students' self-confidence but also transform them into socially responsible citizens. Finally, the study recommends the necessity of integrating Drama in Education as a teaching philosophy within the curriculum to meet the challenges of 21st-century Education 4.0.*

***Keywords:*** *Drama in Education, Personality Development, Social Awareness, Folk Performances, 21st Century Skills, Pedagogy of the Oppressed.*

**References**

1. Benn, S. (2011). The importance of arts education in a global economy. Arts Journal Press.
2. Boal, A. (2000). Theater of the oppressed. Pluto Press.
3. Dewey, J. (1938). Experience and education. Kappa Delta Pi. Drake, S. M., & Reid, J. L. (2020). 21st century competencies in light of the history of integrated curriculum. Frontiers in Education, 5. https://doi.org/10.3389/feduc.2020.00122
4. Erikson, E. H. (1968). Identity: Youth and crisis. W. W. Norton & Company.
5. Freire, P. (2018). Pedagogy of the oppressed. Bloomsbury Publishing.
6. Goleman, D. (2006). Emotional intelligence: Why it can matter more than IQ. Bantam Books.
7. Heathcote, D., & Bolton, G. (1995). Drama for learning: Dorothy Heathcote's mantle of the expert approach to education. Heinemann.

8. Kagan, S. (1994). Cooperative learning. Kagan Cooperative Learning.
9. Kong, Y. (2021). The role of experiential learning on students' motivation and classroom engagement. Frontiers in Psychology, 12. https://doi.org/10.3389/fpsyg.2021.714121
10. Maroulis, C. (2021). Sustainability education for the future? Challenges and implications for education and pedagogy in the 21st century. Sustainability, 13(5), 2901. https://doi.org/10.3390/su13052901
11. McCaslin, N. (2006). Creative drama in the classroom and beyond. Pearson/Allyn & Bacon.
12. Nietzsche, F. (2011). The birth of tragedy out of the spirit of music. (Original work published 1872).
13. Piaget, J. (1952). The origins of intelligence in children. International Universities Press.
14. Shulman, D. (1985). The king and the clown in South Indian myth and poetry. Princeton University Press.
15. Vygotsky, L. S. (1978). Mind in society: The development of higher psychological processes. Harvard University Press.
16. Way, B. (1967). Development through drama. Longman.

# 21ஆம் நூற்றாண்டுத் திறன்களை வளர்த்தெடுப்பதில் கல்வியியல் நாடகத்தின் பங்கு: இலங்கைப் பாடசாலைச் சூழலை மையப்படுத்திய தத்துவார்த்த ஆய்வு

***கலாநிதி அழகையா விமலராஜ்***
முதுநிலை விரிவுரையாளர், நடன நாடகத்துறை
சுவாமி விபுலாநந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

***ஆய்வுச் சுருக்கம்***
*நவீன உலகமயமாக்கல் சூழலில், 21ஆம் நூற்றாண்டுத் திறன்களாகக் கருதப்படும் விமர்சனச் சிந்தனை, ஆக்கத்திறன் மற்றும் தொடர்பாடல் ஆற்றல் ஆகியவற்றை மாணவர்களிடையே வளர்த்தெடுப்பதில் கல்வியியல் நாடகத்தின் பங்களிப்பினை இக்கட்டுரை ஆராய்கிறது. தற்காலத் தேர்வு மையக் கல்வி முறைமை மாணவர்களின் இயல்பான ஆளுமை வளர்ச்சியை மழுங்கச் செய்யும் நிலையில், அதற்கு மாற்றாக அறிவாக்கக் கொள்கை மற்றும் விடுதலைக்கான கல்வியியல் ஆகிய தத்துவங்களின் அடிப்படையில் கல்வியியல் நாடகம் முன்வைக்கப்படுகிறது. இவ்வாய்வு பண்புசார் ஆய்வு முறையியலைப் பின்பற்றி, பிரையன் வே, அகஸ்டோ போயல் மற்றும் பவுலோ பிரையர் ஆகியோரின் கருத்தியல் சட்டகங்களைக் கொண்டு கல்வியியல் நாடக நுட்பங்களை ஆய்வு செய்கிறது. குறிப்பாக, எரிக் எரிக்சனின் சமூக உளவியல் தத்துவத்தின் ஊடாக மாணவர்களின் அடையாளக் கண்டடைவு மற்றும் பாதுகாப்பான கற்றல் வெளி குறித்து விவாதிக்கிறது. மேலும், மதுரை வீரன் போன்ற நாட்டார் சடங்காற்றுகைகளை வகுப்பறைக்குள் கொண்டு வருவதன் மூலம், அதிகாரப் படிநிலைகள் மற்றும் சமூக நீதி குறித்த விழிப்புணர்வை மாணவர்களிடம் எவ்வாறு ஏற்படுத்தலாம் என்பதை இக்கட்டுரை விரிவாக விளக்குகிறது.*
***திறவுச் சொற்கள்:*** *கல்வியியல் நாடகம், ஆளுமை வளர்ச்சி, சமூக விழிப்புணர்வு, நாட்டார் ஆற்றுகைகள், 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள், விடுதலைக்கான கல்வியியல்.*

## ஆய்வு அறிமுகம்

***21ஆம் நூற்றாண்டுத் திறன்களும் கல்விச் சூழலும்:*** உலகமயமாக்கல், நவீனத் தொழில்நுட்பப் புரட்சி மற்றும் அறிவுசார் பொருளாதாரம் ஆகியன 21ஆம் நூற்றாண்டின் கல்விச் சூழலை அடிமட்டத்திலிருந்து மாற்றியமைத்துள்ளன. இன்றைய "கல்வி 4.0" காலகட்டத்தில், வெறும் பாடப்புத்தக அறிவை மட்டும் மனனம் செய்து வழங்கும் கல்வி முறைமையானது காலாவதியான ஒன்றாகக் கருதப்படுகிறது. உலகப் பொருளாதார மன்றம் வலியுறுத்துவது போல, வருங்கால வேலைவாய்ப்புச் சந்தையில் நிலைத்திருக்க கடினத் திறன்களை விட, மென்திறன்கள் எனப்படும் பண்புசார் திறன்களே முதன்மை பெறுகின்றன. குறிப்பாக, விமர்சனச் சிந்தனை, ஆக்கத்திறன், கூட்டாக இணைந்து செயல்படுதல், காத்திரமான தொடர்பாடல் ஆகிய நான்கு திறன்களும் இன்றைய மாணவர்களுக்கு உயிர்நாடியானவை.

இருப்பினும், தற்காலப் பாடசாலைச் சூழலில் நிலவும் அதீத "தேர்வு மையக் கல்வி முறைமை", மாணவர்களை வெறும் மதிப்பெண்களை ஈட்டும் இயந்திரங்களாக மாற்றியுள்ளது. இத்தகைய ஏட்டுக்கல்வி, மாணவர்களின் இயல்பான ஆளுமை வளர்ச்சியையும், சமூகச் சிக்கல்களைப் புரிந்து கொள்ளும் ஆற்றலையும் மழுங்

கடிக்கச் செய்கிறது. ஜான் டூவி (John Dewey) அவர்கள் குறிப்பிட்டதுபோல, "கல்வி என்பது வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்துவது அல்ல, கல்வியே வாழ்க்கைதான்". ஆனால், இன்றைய வகுப்பறைகள் வாழ்வியலில் இருந்து துண்டிக்கப்பட்ட, செயற்கையான சூழல்களாகவே எஞ்சியுள்ளன. இச்சூழ்நிலையில் தான், கல்வியியல் நாடகம் ஒரு மாற்றுத் தத்துவமாகவும், செயல்வழிக் கற்றல் முறையாகவும் முதன்மை பெறுகின்றது.

## ஆய்வுப் பிரச்சினை

இன்றைய கல்விப் புலத்தில் மாணவர்களின் உளவியல்நலனும் ஆளுமைவிருத்தியும் பெரும் அறைகூவலுக்கு உள்ளாகியுள்ளன. அதீதப் போட்டி மற்றும் தேர்வு அச்சம் காரணமாக மாணவர்களிடையே மன அழுத்தம் அதிகரித்துள்ளதுடன், சமூக யதார்த்தங்களில் இருந்து அவர்கள் துண்டிக்கப்படுகின்றனர். கலைத்திட்டத்தில் நாடகம் என்பது ஒரு புறக்கணிக்கப்பட்ட பாடமாகவோ அல்லது வெறும் பொழுதுபோக்கு நிகழ்வாகவோ மட்டுமே சுருக்கப் பட்டுள்ளது. இதனால் மாணவர்களின் விமர்சனச் சிந்தனை மற்றும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் வளர்க்கப்படுவதில்லை. இத்தகைய இடைவெளியை நிரப்புவதற்கு, கல்வியியல் நாடகத்தை ஒரு கற்பித்தல் தத்துவமாக ஒருங்கிணைக்க வேண்டியதன் அவசியமே இவ்வாய்வின் மையப் பிரச்சினையாகும்.

## ஆய்வு வினாக்கள்

மேற்கூறிய ஆய்வுப் பிரச்சினையின் அடிப்படையில், இவ்வாய்வு பின்வரும் வினாக்களுக்கான விடைகளைத் தேடுகின்றது:

1. கல்வியியல் நாடக நுட்பங்கள் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சி மற்றும் மென்திறன்களை எவ்வாறு மேம்படுத்துகின்றன?
2. நாட்டார் சடங்காற்றுகைகளை (எ.கா: மதுரை வீரன்) நாடக எழுத்துருக்களாக மாற்றிப் பயிற்றுவிப்பதன் மூலம் மாணவர்களிடம் எவ்வாறான சமூக விழிப்புணர்வையும் நீதியுணர்வையும் ஏற்படுத்த முடியும்?
3. தற்காலத் தேர்வு மையக் கல்விச் சூழலில் கல்வியியல் நாடகத்தை ஒரு மாற்றுப் போதனா முறையாக நிலைநிறுத்துவதில் உள்ள சாத்தியப்பாடுகள் யாவை?

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வு ஒரு தத்துவார்த்த ஆய்வு எனும் பண்புசார் ஆய்வு முறையியலைப் பின்பற்றி அமைகின்றது. இதற்கான முதன்மைத் தரவுகள் கல்வியியல் மற்றும் அரங்கியல் சார்ந்த புகழ்பெற்ற அறிஞர்களின் (அகஸ்டோ போயல், பவுலோ பிரையர், பிரையன்வே போன்றோர்) நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் சர்வதேசக் கல்வி நிறுவனங்களின் ஆவணங்கள் ஆகியவற்றிலிருந்து திரட்டப் பட்டுள்ளன. மேலும், இலங்கையின் நாட்டார் வழக்காற்றியல் தரவுகள் மற்றும் "பறப்பிழந்த வண்ணத்துப்பூச்சி" போன்ற சமகால நாடகப் பிரதிகள் இக்கோட்பாட்டு விளக்கங்களுக்குச் சான்றாதாரங்களாகப் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

## கல்வியியல் நாடகம்: கருத்தியல் விளக்கம்

கல்வியியல் நாடகம் என்பது கலைக்கும் கல்விக்கும் இடையிலான ஒரு சந்திப்புப் புள்ளியாகும். இது நாடகத்தை வெறும் காட்சிப் பொருளாகவோ அல்லது மேடை ஆற்றுகையாகவோ மட்டும் பார்க்காமல், அதனைக் கற்றல் கற்பித்தல் செயல் பாட்டின் ஒரு முதன்மையான நுட்பமாகக் கருதுகின்றது. அதாவது, கலை என்பது இங்கு இலக்கல்ல: அது ஒரு வழிமுறை. மாணவர்களின் ஆளுமையைச் செதுக்கவும், பாடப் பொருள்களை ஆழமாக விளங்கிக் கொள்ளவும், சமூக உணர்வுகளை மேம்படுத்தவும் நாடகமானது ஒரு போதனா முறையாகப் பயன்படுத்தப்படுகின்றது.

**வரைவிலக்கணமும் அடிப்படை நோக்கமும்**

கல்வியியல் நாடகத்திற்குப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விளக்கங்களை வழங்கியுள்ளனர். பிரையன் வே (Way 1967) தனது "நாடகம் ஊடாக வளர்ச்சி" (Development through Drama) எனும் நூலில், கல்வியியல் நாடகத்தை ஒரு "செயல்முறை" என அழைக்கின்றார். அவரைப் பொறுத்தவரை, "நாடகம் என்பது மனித ஆளுமையை முழுமைப்படுத்தும் ஒரு பயிற்சி. இது ஒரு மாணவனின் அறிவு, உணர்வு மற்றும் உடல் ஆகிய மூன்றையும் ஒரு புள்ளியில் இணைக்கின்றது" (Way 1967).

நெலி மெக்காஸ்லின் (McCaslin 2006) இதைப் பற்றிக் குறிப்பிடும்போது, இது "ஆக்கபூர்வமான நாடகம்" எனக்கூறுகின்றார். இது முன்கூட்டியே எழுதப்பட்ட வசனங்களை மனனம் செய்து ஒப்பிப்பதல்ல மாறாக, ஒரு சூழலை உள்வாங்கி மாணவர்கள் தன்னிச்சையா எதிர்வினையாற்றுவதாகும். இதன் மூலம் மாணவர்கள் வெறும் "பார்வையாளர்களாக" இருக்காமல், கற்றல் செயல்பாட்டில் "செயல்பாட்டு வீரர்களாக" மாறுகின்றனர்.

**அறிவாக்கக் கொள்கையும் கல்வியியல் நாடகமும்**

கல்வியியல் நாடகத்தின் தத்துவார்த்த வேர்கள் அறிவாக்கக் கொள்கையில் ஆழமாகப் பதிந்துள்ளன. இக்கொள்கையின்படி, அறிவு என்பது வெளியில் இருந்து ஆசிரியரால் மாணவர்களின் மண்டைக்குள் திணிக்கப் படும் ஒன்றல்ல. லெவ் வைகொட்ஸ்கி (Vygotsky 1978) மற்றும் ஜீன் பியாஜே (Piaget 1952) போன்ற அறிஞர்கள் விளக்கியது போல, மாணவர்கள் தங்களின் முந்தைய அனுபவங்கள் மற்றும் சமூகத் தொடர்புகள் ஊடாக அறிவைத் தாமாகவே "கட்டமைக்கின்றனர்".

கல்வியியல் நாடகத்தில் ஒரு சூழலை மாணவர்களுக்கு வழங்கும்போது, அவர்கள் அந்தச் சூழலில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, தங்களுடைய முந்தைய அறிவைப் பயன்படுத்திப் புதிய தீர்வுகளைக் கண்டறிகின்றனர். உதாரணமாக, நீர் மாசுபடுதல் பற்றிய ஒரு பாடத்தில், ஆசிரியர் விரிவுரை ஆற்றுவதற்குப் பதிலாக, மாணவர்களை ஒரு கிராமத்து மக்களாகவும், அங்கு தொழிற்சாலை அமைக்க வரும் அதிகாரிகளாகவும் பாத்திரமேற்கச் செய்யலாம். இங்கு மாணவர்கள் விவாதிக்கும்போது, நீர் மாசுபடுவதன் விளைவுகளைத் தங்களின் சொந்த அனுபவங்கள் வாயிலாகத் தாமாகவே கண்டடைகின்றனர். இதுவே உண்மையான அறிவாக்கக் கற்றலாகும்.

**விடுதலைக்கான கல்வியியலும் கல்வியியல் நாடகமும்**

பிரேசில் நாட்டுப் புகழ்பெற்ற கல்வியாளர் பவுலோ பிரையர் (Freire 2018) முன்வைத்த "விடுதலைக்கான கல்வியியல்" தத்துவம் கல்வியியல் நாடகத்திற்கு ஒரு வலுவான அரசியல் மற்றும் சமூக அடித்தளத்தை வழங்குகின்றது. அவர் தற்போதைய கல்வி முறையை "வங்கி முறை கல்வி" எனச் சாடுகின்றார். இதில் ஆசிரியர் என்பவர் அறிவைச் சேமித்து வைப்பவராகவும், மாணவர்கள் அதனைப் பெற்றுக்கொள்ளும் வெற்றுப் பாத்திரங்களாகவும் கருதப் படுகின்றனர்.

இதற்கு மாற்றாக, "சிக்கல் சார் கல்வி" முறையை அவர் முன்மொழிகின்றார். கல்வியியல் நாடகம் இந்தச் சிக்கல் சார் கல்வி முறையை மிகச் சரியாகப் பிரதிபலிக்கின்றது. அகஸ்டோ போயல் (Boal 2000) உருவாக்கிய "ஒடுக்கப்பட்டோரின் அரங்கு" இத்தத்துவத்தின் நேரடிப் பயன்பாடாகும். இதில் மாணவர்கள் வெறும் "பார்வையாளர்களாக" இல்லாமல், நாடகத்தின் இடையே புகுந்து சிக்கல்களுக்குத் தீர்வு சொல்லும் "செயல்படும் பங்கேற்பாளர்களாக" மாறுகின்றனர். இதன் மூலம் சமூக அநீதிகளைக் கண்டு கேள்வி

கேட்கும் துணிவும், சமூக மாற்றத்திற்கான தேடலும் மாணவர்களிடம் உருவாகின்றன.

### கல்வியியல் நாடகத்தின் அடிப்படை நுட்பங்கள்: உதாரணங்களுடன்

கல்வியியல் நாடகம் சில தனித்துவமான நுட்பங்களைப் பயன்படுத்துகின்றது. இவை மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் கருவிகளாகச் செயல்படுகின்றன:

1. பாத்திரமேற்றல்: மாணவர்கள் தங்களின் இயல்பைத் தாண்டி வேறொரு மனிதராகவோ அல்லது பொருளாகவோ மாறிச் சிந்திப்பது. (உதாரணம்: ஒரு வரலாற்றுக் கதையில் கட்டபொம்மனாக நடிக்கும்போது, அந்தப் பாத்திரத்தின் உணர்வையும் காலச்சூழலையும் மாணவன் உணர்கின்றான்).
2. உறைபனி உருவம்: ஒரு குறிப்பிட்ட சிக்கலை அல்லது உணர்வை மாணவர்கள் சிலையாக நின்று காட்டுவது. இது ஒரு காட்சியை ஆழமாக ஆய்வு செய்ய உதவுகின்றது (Boal, 2000).
3. ஆசிரியர் பாத்திரமேற்றல்: ஆசிரியர் தானும் ஒரு பாத்திரமாக மாறி மாணவர்களுடன் நாடகத்தில் இணைந்து கொள்வார். இது வகுப்பறையில் உள்ள அதிகாரப் படிநிலையை உடைக்க உதவுகின்றது (Heathcote & Bolton, 1995).
4. எண்ணவோட்ட நடை: ஒரு மாணவன் சிலையாக நின்று கொண்டிருக்கும்போது, ஆசிரியர் அவன் தோளைத் தொடுவார். அப்போது அந்தப் பாத்திரத்தின் மனதில் ஓடும் ஆழ்மன எண்ணங்களை மாணவன் உரக்கச் சொல்ல வேண்டும். இது மாணவனின் அகவயப்பட்ட உணர்வுகளை வெளிக்கொணர உதவு கின்றது.

### ஒருங்கிணைந்த கற்றலில் நாடகத்தின் பங்கு

கல்வியியல் நாடகம் என்பது மொழிப் பாடங்களுக்கு மட்டும் உரியதல்ல. இது கணிதம், அறிவியல் மற்றும் சமூகவியல் போன்ற அனைத்துப் பாடங்களுக்கும் பொருந்தும். டொரதி ஹீத்கோட் (Heathcote & Bolton, 1995) இதைப் பற்றிச் சொல்லும்போது, நாடகம் என்பது "மனித அனுபவங்களை ஆய்வு செய்யும் ஒரு கூடம்" என்கிறார்.

உதாரணம்: அறிவியல் பாடத்தில் "கோள்களின் இயக்கம்" பற்றிப் படிக்கும் போது, ஒவ்வொரு மாணவனையும் ஒரு கோளாக மாறச் செய்து, அவர்களைத் தங்களுக்குரிய பாதையில் சுழலச் செய்வதன் மூலம், ஈர்ப்பு விசை மற்றும் கோள்களின் வரிசை முறையை அவர்கள் உடல் அசைவுகள் மூலம் ஆழமாகப் புரிந்து கொள்ள முடியும். இது "உடல் இயக்கக் கற்றல்" முறைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### ஆளுமை வளர்ச்சியில் நாடக நுட்பங்களின் பங்கு

மாணவர்களின் ஆளுமை என்பது வெறும் புறத்தோற்றம் சார்ந்தது அன்று: அது அவர்களின் மன உறுதி, முடிவெடுக்கும் திறன், பிறரை உள்வாங்கும் பண்பு மற்றும் தொடர்பாடல் ஆற்றல் ஆகியவற்றின் ஒருமித்த வெளிப்பாடாகும். கல்வியியல் நாடகம், ஒரு மாணவனின் ஆளுமையைச் செதுக்குவதில் ஒரு வலிமையான கருவியாகச் செயல்படுகின்றது. இது மாணவர்களை ஒரு குறிப்பிட்ட சட்டகத்திற்குள் அடைக்காமல், அவர்களின் உள்ளார்ந்த திறன்களைக் கண்டறியவும், அவற்றை மெருகேற்றவும் வழிவகை செய்கின்றது.

### அடையாளத் தேடலும் பாதுகாப்பான வெளியும்

வளரிளம் பருவத்தினர் எதிர்கொள்ளும் மிகமுக்கியமான சிக்கல் "தான் யார்?" என்ற அடையாளத் தேடல் ஆகும். எரிக் எரிக்சனின் (Erikson 1968) சமூக உளவியல் வளர்ச்சித் தத்துவத்தின்படி, இந்தப் பருவத்தினர் "அடையாளம் எதிர் பாத்திரக் குழப்பம்" எனும் நிலையை எதிர்கொள்கின்றனர்.

இக்காலகட்டத்தில் அவர்கள் சமூகத்தில் தமக்கான ஒரு இடத்தைத் தேடுகின்றனர்.

கல்வியியல் நாடகம் இவர்களுக்கு ஒரு "பாதுகாப்பான வெளி"யை வழங்குகின்றது. இங்கு ஒரு மாணவன் ஒரு அதிகாரியாகவோ, ஒரு தொழிலாளியாகவோ அல்லது ஒரு போராட்டக்காரராகவோ பாத்திரமேற்று நடிக்கும்போது, நிஜ வாழ்க்கையில் ஏற்படும் பாதிப்புகள் ஏதுமின்றிப் பல்வேறு சமூக அடையாளங்களைச் சோதனை செய்து பார்க்க முடிகின்றது. இது குறித்துப் பேசும் காகன் (Kagan 1994), "நாடகம் என்பது மாணவர்கள் தோல்வியைப் பற்றிய பயமின்றித் தங்களைச் சோதித்துப் பார்க்கும் ஒரு ஆய்வகம்" என்று குறிப்பிடுகின்றார். இத்தகைய சோதனைகள் மாணவர்களின் சுய உணர்வையும், தங்களைப் பற்றிய தெளிவையும் அதிகரிக்கின்றன.

## பாத்திரமேற்றல்: புதிய கோணங்களில் சிந்தித்தல்

நாடகத்தின் மிக அடிப்படையான நுட்பம் பாத்திரமேற்றல் ஆகும். இது ஒரு மாணவனைத் தனது சொந்த விருப்பங்கள் மற்றும் விருப்பு வெறுப்புகளைத் தாண்டி, வேறொருவரின் காலணியில் நின்று உலகைப் பார்க்கக் கற்றுக்கொடுக்கின்றது.

இந்த நுட்பம் மாணவர்களின் விமர்சனச் சிந்தனையைத் தூண்டுகின்றது. ஒரு வரலாற்றுச் சிக்கலையோ அல்லது தற்காலச் சமூகப் பிரச்சினையையோ நாடகமாக உருவகப்படுத்தும் போது, மாணவர்கள் அந்தப் பாத்திரம் ஏன் இப்படிச் செயல்படுகின்றது? அதன் பின்னணி என்ன? என்று ஆராயத் தொடங்குகின்றனர். இது ஒற்றைப்படையான சிந்தனை முறையை உடைத்து, ஒரு சிக்கலைப் பன்முகக் கோணங்களில் அணுகும் பக்குவத்தை வழங்குகின்றது (Heathcote & Bolton, 1995).

## உணர்வறிதிறன் மற்றும் எண்ணவோட்ட நடை

ஆளுமை வளர்ச்சியில் பரிவுணர்வு அல்லது உணர்வறிதிறன் என்பது மிக உயரிய பண்பாகும். இதனை வளர்ப்பதில் "எண்ணவோட்ட நடை" போன்ற நாடக நுட்பங்கள் பெரும் பங்காற்றுகின்றன.

உதாரணம்: வறுமையின் காரணமாகக் கல்வி கற்க முடியாத ஒரு சிறுவனின் பாத்திரத்தை ஒரு மாணவன் ஏற்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் ஒரு சிலையாக நின்று கொண்டிருக்கும்போது, ஆசிரியர் அவனது தோளைத் தொடுகிறார். அப்போது அந்த மாணவன், "எனக்குக் கற்க ஆசைதான், ஆனால் என் குடும்பத்தின் பசி என் புத்தகங்களை விடக் கனமாக இருக்கிறது" என்று தனது அக உணர்வை வெளிப்படுத்துகிறான்.

இத்தகைய நுட்பங்கள், பிறரது வலியைத் தனது வலியாக உணரும் தன்மையை மாணவர்களிடம் உருவாக்குகின்றன. இது குறித்துப் பேசும் டேனியல் கோல்மேன் (Goleman, 2006), "உணர்வுசார் அறிவு என்பது ஒருவரது வெற்றியின் 80 விழுக்காட்டைத் தீர்மானிக்கின்றது" என்கிறார். நாடகம் இந்த உணர்வுசார் அறிவை வளர்ப்பதற்கான களமாக அமைகின்றது.

## தன்னம்பிக்கை மற்றும் மேடை அச்சம் நீங்குதல்

பல மாணவர்களுக்குத் திறமைகள் இருந்தும், அவற்றைப் பிறர் முன்னிலையில் வெளிப்படுத்தத் தயக்கமும் அச்சமும் இருக்கும். கல்வியியல் நாடகம் இத்தகைய மேடை அச்சத்தை வேரோடு களைய உதவுகின்றது.

நாடகச் செயல்பாடுகளில் ஈடுபடும்போது, மாணவர்கள் தன்னிச்சையாகப் பேசவும், உடல் அசைவுகள் மூலம் கருத்துக்களை வெளிப்படுத்தவும் பழகுகின்றனர். இது அவர்களின் தொடர்பாடல் திறனை மேம்படுத்துகின்றது. ஒரு கருத்தைத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் முன்வைக்கும்

ஆற்றல் கூடும்போது, அவர்களின் தன்னம்பிக்கை இயல்பாகவே உயர்கின்றது. "நாடகம் என்பது ஒருவரது குரலையும் உடலையும் ஒரு கருவியாகப் பயன்படுத்தக் கற்றுக்கொடுக்கின்றது" (Way, 1967). இந்தப் பயிற்சி மாணவர்களைப் பிற்காலத்தில் சிறந்த பேச்சாளர்களாகவும், தலைமைத்துவப் பண்பு கொண்டவர்களாகவும் மாற்றுகின்றது.

## கூட்டுழைப்பும் தலைமைத்துவப் பண்பும்

நாடகம் என்பது ஒரு தனிமனிதச் செயல்பாடு அல்ல: அது ஒரு கூட்டான முயற்சி. ஒரு சிறிய காட்சியை உருவாக்குவதற்குக் கூட மாணவர்கள் ஒருவருக்கொருவர் கலந்துரையாட வேண்டும், விட்டுக்கொடுக்க வேண்டும் மற்றும் இணைந்து செயல்பட வேண்டும்.

இங்கு "நெகிழ்வான தலைமைத்துவம்" உருவாகின்றது. ஒரு காட்சியில் ஒரு மாணவன்தலைவனாக இருக்கலாம், அடுத்த காட்சியில் அவன் ஒரு சாதாரணப் பாத்திரமாக இருக்கலாம். இது அதிகாரப் படிநிலைகளைக் கடந்து, ஒரு இலக்கை நோக்கி அனைவரும் இணைந்து பணியாற்றும் பண்பை வளர்க்கின்றது. பென் (Benn, 2011) குறிப்பிடுவது போல, "கூட்டாக இணைந்து கலைப் படைப்பை உருவாக்குதல் என்பது சமூகத்தில் இணைந்து வாழ்வதற்கான ஒரு முன்-பயிற்சியாகும்".

## உளவியல் நலனும் மனத்தூய்மையும்

நவீனக் கல்வி முறையில் மாணவர்கள் அதிக மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். அரிஸ்டாட்டிலின் கதார்சிஸ் அல்லது மனத்தூய்மை தத்துவத்தின்படி, நாடகம் என்பது மனித மனதின் தேக்கி வைக்கப் பட்ட உணர்ச்சிகளுக்கு ஒரு வடிகாலாக அமைகின்றது.

மாணவர்கள் தங்களின் கோபம், பயம், கவலை போன்றவற்றை ஒரு பாத்திரத்தின் வழியாக வெளிப்படுத்தும் போது, அவர்களின் மனப்பாரம் குறைகின்றது. இது ஒரு சிறந்த உளவியல் சிகிச்சை முறையாகவும் செயல்படுகின்றது. மகிழ்ச்சியான மற்றும் பாதுகாப்பான கற்றல் சூழலில் மாணவர்கள் ஈடுபடும்போது, அவர்களின் கற்றல் திறன் அதிகரிப்பதுடன், ஆரோக்கியமான ஆளுமை வளர்ச்சியும் உறுதி செய்யப்படுகின்றது (Maroulis, 2021).

## சமூக விழிப்புணர்வும் ஆற்றுகையும்

கல்வியியல் நாடகம் என்பது தனிமனித ஆளுமை மேம்பாட்டுடன் மட்டும் நின்றுவிடாமல், சமூகத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பும் ஒரு கருவியாகவும் திகழ்கின்றது. கல்விப்புலச் சூழலில் நாடகம் என்பது வெறும் பொழுதுபோக்கு அம்சமாக அன்றி, மாணவர்களைச் சமூக யதார்த்தங்களுடன் பிணைக்கும் ஒரு பாலமாகச் செயல்படுகின்றது. மாணவர்கள் தாங்கள் வாழும் சமூகத்தில் நிலவும் சிக்கல் களை, அதிகாரப் படிநிலைகளை மற்றும் பண்பாட்டு விழுமியங்களை விமர்சனக் கண்ணோட்டத்துடன் அணுக நாடக ஆற்றுகைகள் வழிவகை செய்கின்றன.

## சமூக மாற்றத்திற்கான ஒத்திகை: அகஸ்டோ போயலின் பார்வை

அரங்கியல் கோட்பாட்டாளர் அகஸ்டோ போயல் (Boal, 2000), நாடகத்தைச் சமூக மாற்றத்திற்கான ஓர் ஒத்திகை என்று அழைக்கின்றார். அவரது ஒடுக்கப் பட்டோரின் அரங்கு எனும் கோட்பாடு, பார்வையாளர்களைச் செயலற்ற நிலையில் இருந்து விடுவித்து, அவர்களைச் செயல்பாட்டு வீரர்களாக மாற்றுகிறது.

வகுப்பறைச் சூழலில், மாணவர்கள் ஒரு சமூகப் பிரச்சினையை (உதாரணமாக: சிறுவர் உழைப்பு அல்லது சுற்றுச்சூழல் சீர்கேடு) வெறும் பாடப்புத்தகச் செய்தியாகப் படிக்கும்போது, அது ஒரு தகவல் சேகரிப்பாக மட்டுமே அமைகின்றது. ஆனால், அதே பிரச்சினையை அவர்கள் நாடகமாக ஆற்றிப் பார்க்கும்போது, அந்தச்

சிக்கலின் பின்னணியில் உள்ள சமூக அரசியல் காரணிகளை அவர்கள் ஆழமாக உணர்கின்றனர். "நாடகம் என்பது மனிதர்கள் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வதற்கும், தாங்கள் வாழும் உலகை மாற்றுவதற்குமான ஒரு மொழியாகும்" என்று போயல் (Boal, 2000) குறிப்பிடுகின்றார். இதன் மூலம், மாணவர்கள் சமூக அநீதிகளைக் கண்டு கேள்வி கேட்கும் துணிவைப் பெறுகின்றனர்.

### நாட்டார் ஆற்றுகைகளும் சமூக விழிப்புணர்வும்: மதுரை வீரன் ஒரு சான்று

தமிழ் மரபில் நாட்டார் வழிபாட்டுச் சடங்குகளும் ஆற்றுகைகளும் சமூக வரலாற்றின் ஆவணங்களாகத் திகழ்கின்றன. குறிப்பாக, மதுரை வீரன் போன்ற நாட்டார் நாயகர்களின் வரலாறுகள் வெறும் கதைகள் அல்ல. அவை சமூகநீதி மற்றும் அதிகாரப் போராட்டத்தின் குறியீடுகள் ஆகும்.

கல்வியியல் நாடகச் சூழலில் மதுரை வீரன் வரலாற்றை மாணவர்கள் நாடகமாக்கும் போது, பின்வரும் விழிப்புணர்வுகள் அவர்களிடம் இயல்பாகவே ஏற்படுகின்றன:

**அதிகாரப் படிநிலைகள் குறித்த புரிதல்:** மதுரை வீரன் கதையில் காணப்படும் உயர் அதிகார வர்க்கத்திற்கும், விளிம்புநிலை மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகளை நடிக்கும்போது, மாணவர்கள் சமூகத்தில் நிலவும் அதிகாரக் கட்டமைப்பை எளிதில் புரிந்துகொள்கின்றனர் (Shulman, 1985).

**சமூக நீதி:** சாதியக் கட்டுப்பாடுகளை மீறி நீதிக்காகப் போராடும் ஒரு நாயகனின் பாத்திரத்தை ஏற்கும் மாணவன், சமத்துவம் மற்றும் மனித உரிமை குறித்த அறச்சிந்தனையைப் பெறுகின்றான்.

**ஒடுக்குமுறைக்கு எதிரான குரல்:** ஒரு ஒடுக்கப்பட்ட பாத்திரத்தின் வலியை ஆற்றுகை செய்யும் போது, மாணவர்களிடையே பரிவுணர்வு மேம்படுகின்றது. இது சமூகத்தில் நிலவும் பாகுபாடுகளைக் களைவதற்கான மனப்பாங்கை அவர்களிடம் உருவாக்குகிறது.

தொ. பரமசிவன் (2001) சுட்டிக் காட்டுவது போல, இத்தகைய நாட்டார் நாயகர்களின் வரலாறுகள் வெறும் வழிபாட்டிற்குரியவை மட்டுமல்ல, அவை சமூக நல்லிணக்கத்தையும் நீதியுணர்வையும் போதிக்கும் வலிமை கொண்ட கல்விசார் மூலங்களாகும். இவற்றை வகுப்பறைக்குள் கொண்டு வரும்போது, கல்வி என்பது சமூகத்துடன் பின்னிப் பிணைந்த ஒன்றாக மாறுகின்றது.

### விடுதலைக்கான கல்வியியல் மற்றும் விமர்சன விழிப்புணர்வு

பவுலோ பிரையரின் (Freire, 2018) விடுதலைக்கான கல்வியியல் தத்துவத்தின் படி, கல்வி என்பது மாணவர்களிடையே விமர்சன விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். கல்வியியல் நாடகம் இந்த இலக்கை அடைவதற்கான மிகச்சிறந்த கருவியாகும்.

பாரம்பரியக் கல்வி முறையில் மாணவர்கள் ஆசிரியரின் கருத்துக்களை அப்படியே ஏற்றுக்கொள்பவர்களாக இருக்கின்றனர். ஆனால், நாடக ஆற்றுகையின் போது, மாணவர்கள் ஒரு சூழலைத் தர்க்கரதியாக விவாதிக்கின்றனர். ஒரு நாடகக் காட்சியில் சமூக அநீதி இழைக்கப்படும் போது, அந்தச் சூழலை எவ்வாறு மாற்றலாம்? அந்தப் பாத்திரம் ஏன் பாதிக்கப்படுகிறது? என அவர்கள் விவாதிப்பதன் மூலம் சமூகத்தின் மீதான அவர்களின் பார்வை கூர்மையடைகிறது. "மனிதர்கள் ஒருவருக்கொருவர் உலகோடு தொடர்பு கொள்வதன் மூலமே கற்றுக் கொள்கின்றனர்" எனும் பிரையரின் (Freire, 2018) கூற்று இங்கு மெய்ப்பிக்கப்படுகிறது.

### சமூக நல்லிணக்கத்திற்கான விதையாக நாடகம்

இன்றைய பன்முகத்தன்மை கொண்ட சமூகத்தில், வெவ்வேறு பண்பாட்டுப் பின்னணியைக் கொண்ட மாணவர்கள்

இணைந்து செயல்படுவது மிக அவசியமானது. நாடகச் செயல்பாடுகள் மாணவர்களிடையே ஒரு "கூட்டு அடையாளத்தை" உருவாக்குகின்றன.

நாட்டார் சடங்காற்றுகைகளில் காணப்படும் கூட்டுச் செயற்பாடுகளைப் போலவே, கல்வியியல் நாடகமும் மாணவர்களை ஒரு சமூகக் குழுவாக இயங்க வைக்கின்றது. ஒரு குறிப்பிட்ட சமூகப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிகளை நாடகம் மூலம் கண்டடையும் போது, அது நிஜ வாழ்க்கையில் சமூக முரண்பாடுகளைக் களைந்து நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் ஒரு பயிற்சியாகஅமைகின்றது (Tamilselvan, 2015). உதாரணமாக, இரு சமூகங்களுக்கிடையிலான மோதல்களைக் குறைக்கும் வகையில் ஒரு சமரசப் பேச்சுவார்த்தையை மாணவர்கள் நாடகமாக நடிக்கும்போது, விட்டுக்கொடுத்தல் மற்றும் பேச்சுவார்த்தை மூலம் அமைதியை நிலை நாட்டும் பண்புகள் அவர்களிடம் வளர்கின்றன.

## ஆய்வு முடிவுகளும் விவாதங்களும்

இந்த ஆய்வின் ஊடாகத் திரட்டப் பட்ட கோட்பாட்டுத் தரவுகள் மற்றும் பகுப்பாய்வு முடிவுகள், கல்வியியல் நாடகம் என்பது மாணவர்களின் கற்றல் முறையில் வெறும் துணைக்கருவி அல்ல, மாறாக அது மாணவர்களின் ஆளுமை மாற்றத்திற்கான ஒரு வலிமையான "வினையூக்கி" என்பதை உறுதிப்படுத்துகின்றன. 21 ஆம் நூற்றாண்டின் கல்விச் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான பண்புசார் மாற்றங்களை இது எவ்வாறு நிகழ்த்துகின்றது என்பது குறித்த விரிவான விவாதங்கள் கீழே முன்வைக்கப்படுகின்றன.

## ஆளுமை மாற்றம் மற்றும் அடையாளக் கண்டறிதல்

கல்வியியல் நாடகத்தில் மாணவர்கள் ஒரு கற்பனைப் பாத்திரத்தை ஏற்கும் போது, அந்தப் பாத்திரம் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்குத் தீர்வுகாண வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர். இது அவர்களின் முடிவெடுக்கும் திறனை இயல்பாகவே மேம்படுத்துகின்றது. எரிக் எரிக்சனின் (Erikson 1968) சமூக உளவியல் வளர்ச்சித் தத்துவத்தின்படி, பதின்ம வயதினர் தங்களின் அடையாளத்தைக் கண்டறியும் போராட்டத்தில் உள்ளனர்.

கல்வியியல் நாடகம் அவர்களுக்குப் பல்வேறு சமூக அடையாளங்களைச் சோதனைசெய்துபார்க்கஒருபாதுகாப்பான போலிச் சுழலை வழங்குகிறது. குழுவாக இணைந்துஒருநாடகச்சூழலைஉருவாக்கும் போது, மாணவர்கள் ஒருவரை ஒருவர் வழிநடத்த வேண்டியுள்ளது. இது அவர்களிடம் ஒளிந்திருக்கும் தலைமைத்துவப் பண்புகளை வெளிக்கொணருகின்றது. குறிப்பாக, நெகிழ்வான தலைமைத்துவம் மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட ஆளுமை போன்ற நவீன மேலாண்மைக் கருத்துருக்கள் இங்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## மேடை அச்சம் நீங்குதலும் சுயமதிப்பு மேம்பாடும்

நாடகப் பாத்திரங்கள் வழியாகத் தங்களை வெளிப்படுத்தும் போது, மாணவர்களிடையே காணப்படும் மேடை அச்சம் மற்றும் சமூகப் பதற்றம் கணிசமாகக் குறைகின்றது. இதன் மூலம் அவர்களின் சுயமதிப்பு உயர்கின்றது. புதிய சூழல்களை எதிர்கொள்ளும் போது, தன்னிச்சையான எதிர்வினைகள் மூலம் மாணவர்கள் புத்தாக்கமான தீர்வுகளை முன்வைக்கின்றனர்.

இது ஜான் டூவியின் (Dewey, 1938) "செயல்வழிக் கற்றல்" கொள்கையை மெய்ப்பிக்கின்றது. உதாரணமாக, ஒரு வரலாற்றுப் பாடத்தில் அரசன் அல்லது அமைச்சர் பாத்திரத்தை ஏற்கும் மாணவன், நாட்டின் பஞ்சத்தைத் தீர்க்க எடுக்கும் முடிவுகள், அவனது நிஜ வாழ்க்கையின் பகுத்தறிவுச் சிந்தனையை வலுப்படுத்துகின்றன. ஆக்கபூர்வமான கற்றல் சூழல்கள்

மாணவர்களின் உள்ளார்ந்த ஊக்கத்தை மேம்படுத்துகின்றன என்பதைப் பல ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன (Kong, 2021). அனுபவபூர்வமான கற்றல் மாணவர்களின் வகுப்பறை ஈடுபாட்டை அதிகரிப்பதுடன், நிஜ உலகச் சூழ்நிலைகளில் தங்கள் அறிவைப் பயன்படுத்தும் வாய்ப்பை வழங்குகின்றது.

### சமூக விழிப்புணர்வும் அறச்சிந்தனையும்

சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்ட நாடகச் செயல்பாடுகள், மாணவர்களிடையே வெறும் தகவல்களைத் தாண்டி ஆழமான அறச்சிந்தனையை ஏற்படுத்துகின்றன. ஒடுக்கப்பட்ட அல்லது பாதிக்கப்பட்ட ஒரு பாத்திரத்தை ஏற்று நடிக்கும் போது, மாணவர்கள் அந்த வலியினைத் தாமாகவே உணர்கின்றனர். இது மற்றவர்கள் மீதான பரிவுணர்வையும் சகிப்புத்தன்மையையும் வளர்க்கின்றது.

அகஸ்டோ போயலின் (Boal, 2000) ஒடுக்கப்பட்டோரின் அரங்கு கோட்பாட்டின்படி, மாணவர்கள் வெறும் பார்வையாளர்களாக அன்றி, செயல்படும் பங்கேற்பாளர்களாக மாறும் போது சமூக அசைவியக்கத்தைப் புரிந்து கொள்கின்றனர். மதுரை வீரன் போன்ற நாட்டார் நாயகர்களின் வரலாற்றில் காணப்படும் சமூக அடக்குமுறைகளை நாடகமாக்கும்போது, மாணவர்கள் அதன் பின்னுள்ள அதிகார அரசியலை உணர்வதோடு, சமூக நல்லிணக்கத்தின் அவசியத்தையும் தர்க்கரதியாகப் புரிந்து கொள்கின்றனர். ல்மேனின் (Shulman, 1985) கருத்துப்படி, இத்தகைய ஆற்றுகைப் பாத்திரங்கள் சமூகப் புரிதலுக்குப் பெரும் பாலமாக அமைகின்றன.

### விமர்சன விழிப்புணர்வும் சமூக விடுதலையும்

பவுலோ பிரையரின் (Freire, 2018) "விடுதலைக்கான கல்வியியல்" தத்துவத்தின்படி, கல்வியியல் நாடகம் மாணவர்களிடையே விமர்சன விழிப்புணர்வை உருவாக்குகின்றது. இது சாதி, சமத்துவமின்மை போன்ற சமூகச் சிக்கல்களைக் கட்டுடைக்க உதவுகின்றது. மேலும், நாட்டார் வழிபாட்டுச் சடங்குகளில் காணப்படும் கூட்டுச் செயற்பாடுகளைப் போலவே, கல்வியியல் நாடகமும் மாணவர்களை ஒரு சமூகக் கூட்டு அடையாளத்திற்குள் கொண்டு வருகின்றது.

நீட்சே (Nietzsche, 2011) குறிப்பிட்டது போல, அரங்கியல் ஆற்றுகைகள் மனிதனின் ஆழமான சமூக உணர்வுகளை வெளிக்கொணரும் ஊடகமாகத் திகழ்கின்றன. இது சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளைக் களைந்து நல்லிணக்கத்தை உறுதிப்படுத்தும் ஒரு கருவியாகச் செயல்படுகின்றது.

### உளவியல் நலம் மற்றும் கற்றல் மகிழ்ச்சி

தற்காலப் பரீட்சை மையக் கல்வி முறை மாணவர்களிடையே அதீத மன அழுத்தத்தை உருவாக்கியுள்ள சூழலில், கல்வியியல் நாடகம் ஒரு சிறந்த உளவியல் நலன் பேணும் கருவியாகத் திகழ்கின்றது. அரிஸ்டாட்டிலின் "மனத்தூய்மை" தத்துவத்தின்படி, நாடகச் செயல்பாடுகள் மாணவர்களின் தேக்கி வைக்கப்பட்ட உணர்ச்சிகளுக்கு ஒரு வடிகாலாக அமைந்து, அவர்களின் மன அழுத்தத்தைக் குறைக்கின்றன.

இது அறிவுசார் வளர்ச்சியையும், உணர்வு சார் புலத்தையும் ஒருங்கிணைக்கின்றது. பாரம்பரிய ஏட்டுக்கல்வி முறையைவிட, ஆக்கபூர்வமான மற்றும் விளையாட்டு முறையிலான நாடகக் கற்றல் மாணவர்களின் உள்ளார்ந்த ஊக்கத்தைத் தூண்டி, கற்றலை மகிழ்ச்சிகரமானதாக மாற்றுகின்றது. சக மாணவர்களுடன் இணைந்து செயல்படுதல் அவர்களுக்குள் ஒரு பாதுகாப்பான மற்றும் ஆதரவான கற்றல் சூழலை உருவாக்குகின்றது.

### கல்வி 4.0 மற்றும் வாழும் பாடசாலைகள்

தற்போதைய "கல்வி 4.0" (Education 4.0) கட்டமைப்பில் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு முக்கியம் பெற்றாலும், மனித விழுமியங்களையும் சமூகத் திறன்களையும் வளர்ப்பதில் நாடகத்தின் பங்கு ஈடுசெய்ய

முடியாதது. நவீன ஆய்வுகளின்படி (Maroulis, 2021), 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள வாழும் பாடசாலைகள் என்ற கருத்துருவில் கல்வியியல் நாடகம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இது மென்திறன்கள், தொழில் நுட்பம் மற்றும் மனித விழுமியங்களை ஒருங்கிணைத்து, மாணவர்களை முழுமையான ஆளுமைகளாக மாற்றுகின்றது.

மேலும், ஒருங்கிணைந்த கலைத்திட்டம் வாழ்க்கையின் சிக்கலான உண்மைகளைப் பிரதிபலிக்கும் வகையில் அமைய வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு சூற்றுச்சூழல் பிரச்சினையை நாடகமாக ஆராயும் போது, மாணவர்கள் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சமூகவியல் ஆகியவற்றை ஒருங்கிணைத்துப் பயன்படுத்த முடிகிறது (Drake & Reid, 2020).

### திறன் கல்வியியல் நாடகத்தின் தாக்கம் ஆதாரக் கோட்பாடு

| திறன் | கல்வியியல் நாடகத்தின் தாக்கம் | ஆதாரக் கோட்பாடு |
|---|---|---|
| தலைமைத்துவம் | குழுவை வழிநடத்தும் 'பகிர்ந்தளிக்கப்பட்ட ஆளுமை' வளர்கிறது. | நவீன மேலாண்மைக் கோட்பாடுகள் |
| உளவியல் நலம் | 'மனத்தூய்மை' (Catharsis) மூலம் மன அழுத்தம் குறைகிறது. | அரிஸ்டாட்டிலின் கதார்சிஸ் |
| கற்றல் ஆர்வம் | செயல்வழிக் கற்றல் மூலம் கற்றல் மகிழ்ச்சியாகிறது. | ஜான் டூவியின் அனுபவக் கற்றல் |
| விமர்சனச் சிந்தனை | சமூக அரசியல் காரணிகளை ஆராயும் திறன் கூடுகிறது. | பவுலோ பிரையரின் விடுதலைக் கல்வி |

### முடிவுரையும் பரிந்துரைகளும்

கல்வியியல் நாடகம் என்பது வெறும் ஒரு பாடவேளையோடு முடிந்துவிடும் ஒரு எளிய செயல்பாடு அல்ல: மாறாக, அது மாணவனின் சிந்தனை முறையையே மாற்றியமைக்கக்கூடிய ஆழமான கல்வித் தத்துவமாகும். இவ்வாய்வின் ஊடாகக் கண்டறியப்பட்ட உண்மைகள், ஒரு மாணவனின் அகப்பண்புகளையும் புறச் செயல்பாடுகளையும் ஒருங்கிணக்கக் கல்வியியல் நாடகம் ஒரு சிறந்த ஊடகமாக விளங்குவதை உறுதிப்படுத்துகின்றன.

### முடிவுரை

ஒட்டுமொத்தக் கோட்பாட்டுப் பகுப்பாய்வின்படி, கல்வியியல் நாடகம் என்பது மாணவர்களை வெறும் "தகவல் சேமிப்புப் பாத்திரங்களாக" பார்க்காமல், அவர்களைத் துடிப்பான "அறிவு கட்டமைப்பாளர்களாக" மாற்றுகிறது. எரிக் எரிக்சனின் அடையாளக் கோட்பாட்டிற்கு அமைவாக, நாடகச் செயல்பாடுகள் மாணவர்களுக்குத் தங்களைச் சோதனை செய்து பார்க்க ஒரு பாதுகாப்பான வெளியை வழங்குகின்றன.

சமூகப் பிரச்சினைகளை மையப்படுத்திய நாடகச் செயல்பாடுகள், மாணவர்களிடையே ஒரு வலுவான அறச்சிந்தனையையும் சமூகப் பொறுப்புணர்வையும் விதைக்கின்றன. மதுரை வீரன் போன்ற நாட்டார் நாயகர்களின் வரலாற்றை நாடகமாக்கும் போது, மாணவர்கள் சமூக நீதி மற்றும் அதிகார அரசியலைத் தர்க்கரதியாகப் புரிந்து கொள்கின்றனர். இது பாட சாலைகளுக்குள் நிலவும் இறுக்கமான தேர்வு மையக் கல்வி முறையைத் தளர்த்தி, மாணவர்களின் உளவியல் நலனைப் பேணும் ஒரு வடிகாலாகவும் அமைகின்றது. இறுதியில், 21ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ளும் ஒரு முழுமையான ஆளுமையை உருவாக்கக் கல்வியியல் நாடகம் ஓர் இன்றியமையாத தேவையாகும்.

### முக்கிய பரிந்துரைகள்

ஆய்வின் முடிவுகளின் அடிப்படையில், தற்காலப் பாடசாலைக் கல்வி முறைமையில் ஆக்கபூர்வமான மாற்றங்களை முன்னெடுக்கப் பின்வரும் பரிந்துரைகள் முன்வைக்கப் படுகின்றன:

**ஆசிரியர் பயிற்சி: போதனா முறையில் மாற்றம்**

ஆசிரியர்களின் கற்பித்தல் திறன்களை மேம்படுத்த, தேசிய மட்டத்திலான ஆசிரியர்

பயிற்சித் திட்டங்களில் கல்வியியல் நாடக நுட்பங்களை ஒரு கட்டாயப் பாடமாக இணைக்க வேண்டும்.

**பயிற்சியின் நோக்கம்:** ஆசிரியர்கள் வெறும் விரிவுரையாளர்களாக அன்றி, கற்றலை எளிதாக்கும் "வழிகாட்டிகளாக" மாற வேண்டும்.

**செயல்முறை:** "ஆசிரியர் பாத்திரமேற்றல்" போன்ற நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம், வகுப்பறையில் நிலவும் அதிகார படிநிலையைக் குறைத்து, மாணவர்கள் ஆசிரியருடன் நெருக்கமாகக் கலந்துரையாடும் சூழலை உருவாக்கலாம்.

### ஒருங்கிணைந்த கலைத்திட்டம் பாடங்களுக்கிடையிலான இணைப்பு

அறிவியல், கணிதம் போன்ற கடினமான பாடங்களை நாடக நுட்பங்கள் ஊடாகக் கற்பிக்க ஊக்கப்படுத்த வேண்டும்.

**அறிவியல்:** நீரின் சுழற்சி முறை அல்லது ஒளியின் பயணம் போன்ற அறிவியல் கோட்பாடுகளை மாணவர்கள் உடல் அசைவுகள் மற்றும் உறைபனி உருவங்கள் மூலம் வெளிப்படுத்தலாம். இது நுண்மையான கருத்துக்களை ஆழமாகப் புரிய வைக்கிறது.

**கணிதம்:** வடிவவியல் அல்லது அளவியல் போன்ற பாடங்களில் மாணவர்கள் கோணங்களாகவும் வடிவங்களாகவும் மாறிச் செயல்படும்போது, கற்றல் என்பது ஒரு விளையாட்டைப் போல மகிழ்ச்சி கரமானதாக மாறுகிறது.

### சமூகத் தொடர்பு: பாடசாலையும் சமூகமும்

பாடசாலைகளுக்கும் சமூகத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க நாட்டார் கலைகளையும் சடங்காற்றுகை களையும் கற்றலில் இணைத்தல் அவசியம்.

பண்பாட்டு வேர்கள்: மாணவர்கள் தங்கள் பகுதிக்குரிய கிராமிய மற்றும் நாட்டார் வழிபாட்டுச் சடங்காற்றுகை களை அவதானிக்கவும், அவற்றை வகுப்பறையில் மீள் ஆற்றுகை செய்யவும் வாய்ப்பளிக்க வேண்டும்.

**சமூக நல்லிணக்கம்:** இது மாணவர்களின் வேர் சார்ந்த பண்பாட்டு அறிவை வளர்ப்பதோடு, சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளைக் களைந்து நல்லிணக்க உணர்வை வளர்க்கும். பாடசாலை என்பது சமூகத்தின் ஒரு சிறு அங்கமாக இயங்குவதை இது உறுதி செய்யும்.

### நாடக மன்றங்களை விழிப்புணர்வு மையங்களாக மாற்றுதல்

பாடசாலைகளில் உள்ள நாடக மன்றங்களை வெறும் ஆண்டு இறுதி கலை நிகழ்வுகளுக்காக மட்டும் பயன்படுத்தாமல், அவற்றின் ஊடாகத் தொடர்ச்சியான சமூக விழிப்புணர்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். அகஸ்டோ போயலின் ஒடுக்கப்பட்டோரின் அரங்கு போன்ற நுட்பங்களைப் பயன்படுத்தி, போதைப் பொருள் ஒழிப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சிறுவர் உரிமை போன்ற விடயங்களை மாணவர்கள் நாடகமாக்கி, சக மாணவர்களுடனும் சமூகத்துடனும் விவாதிக்க ஊக்குவிக்கப்பட வேண்டும்.

### உள்கட்டமைப்பு மற்றும் நிதியொதுக்கீடு

கல்வி 4.0 கட்டமைப்பின் எதிர் பார்ப்புகளை நிறைவேற்ற, பாடசாலைகளில் நாடகச் செயல்பாடுகளுக்கெனத் தனியான இடவசதி மற்றும் போதிய நிதி ஒதுக்கீடு களை உறுதிப்படுத்த வேண்டும். இது மாணவர்கள் எவ்விதத் தடையுமின்றித் தமது ஆக்கத்திறனை வெளிப்படுத்த உதவும்.

முடிவாக, இவ்வாறான மாற்றங்கள் முறையாக நடைமுறைப்படுத்தப்படும் போது மட்டுமே, கல்வி என்பது உண் மையான சமூக விடுதலையை நோக்கிய பயணமாக அமையும். கல்வியியல் நாடகம் என்பது ஒரு கலை மட்டுமல்ல, அது எதிர்காலத் தலைமுறையைச் செதுக்கும் ஒரு உயரிய உளியாகும்.

**உசாத்துணைகள்**

**தமிழ் நூல்கள்**

1. இராமநாதன், ஆறு. (2007). நாட்டார் வழக்காற்றியல்: மரபும் திரிபும். சென்னை: மெய்யப்பன் பதிப்பகம். (மதுரை வீரன் போன்ற நாட்டார் நாயகர்களின் வழிபாட்டுப் பின்னணியை அறிய உதவும்).
2. இராமசுவாமி, மு. (2012). இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் நாடகம். தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம். (நாடகக் கல்வி மற்றும் நவீன நாடக மாற்றங்கள் குறித்த நூல்).
3. பரமசிவன், தொ. (2001). பண்பாட்டு அசைவுகள். சென்னை: காலச்சுவடு பதிப்பகம். (மதுரை வீரன் மற்றும் நாட்டார் தெய்வங்களின் சமூக நீதி அரசியல் குறித்த மிக முக்கியமான நூல்).
4. மௌனகுரு, சி. (1997). ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு. கொழும்பு: குமரன் புத்தக இல்லம். (சடங்கிலிருந்து நாடகம் உருவான விதம் மற்றும் கல்வியியல் அரங்கு குறித்த தகவல்களுக்கு).